1994 ஜனவரி 3]

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை போன்றவற்றை செய்வதற்குத் தகுதியுடையவர்களாக ஆவார்கள். அதற்கேற்றப்படி ஒரு ஆணையை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று மாத அனெஸ்தடிஸ்ட் பயிற்சிக்காகக் கொடுப்பது என்பது, எம்.எஸ். படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பது அல்ல. எந்த மருத்துவர்கள் வேண்டுமென்றாலும் விருப்பப்பட்டால் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். அந்த வகையிலேதான் இப்போது கொடுத்து, இருக்கின்ற நிலைமையை நாம் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் முறையாகப் படித்த அனெஸ்தடிஸ்டுகள் அந்த வேலையில் அமர்த்தப்படுவார்கள். இப்போது நிலைமையைச் சமாளிப்பதற்காக அந்த டிரெய்னிங் பெற்றவர்களை நாம் நியமித்துக் கொண்டிருக்கிறோம். அந்த டிரெய்னிங் தொடர்ந்து நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

124--

தனியாருக்குப் புதிய வழித்தட உரிமங்களை வழங்குதல்.

*10190–**திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு பேருந்து போதுமான அளவு இல்லாத காரணத்தால் புதிய வழித்தட உரிமங்கள் தனியாருக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளை சிறு சிறு கிராமங்களுக்குப் புதிய வழித் தடங்களில் விடுகின்றபோது, கலெக்ஷன் ஆகவில்லை என அவைகள் நிறுத்தப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட குக்கிராமங்களை இணைத்துச் செல்லும் பேருந்துகளால் அரசுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நஷ்டம் ஏற்படக்கூடிய வழித்தடங்களில், கிராம மக்களின் நலன் கருதி, முக்கியமான சாலைகளைத் தவிர்த்து, உட்பகுதியில் உள்ள கிராமங்களை இணைக்கும் சாலைகளுக்காவது தனியாருக்கு உரிமம் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் அரசுக்கு இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10.15

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது குறிப்பிட்ட சில நபர்களே தனியார் பேருந்துகளை இயக்கிப் பயனடைந்து வருகின்றனர். படித்த பட்டதாரிகள் கூட வேலை கிடைக்காதென்று 6 மாதம் லாரியில் டிரைவர்களாக இருந்து பிறகு வங்கிகளில் லோன் வாங்கி லாரி டிரைவர்கள் அவற்றின் ஓனர்களாக மாறிவிடுகின்றனர். ஆனால் பஸ் டிரைவர்களாக செல்கின்றவர்கள் காலம் முழுவதும் தனியார் பஸ் உரிமையாளர்களிடம் காலத்தைக் கழித்து அதிகப்படியான வேலைப் பளுவை ஏற்று தங்களுடைய உழைப்பை வீணாக்கி வருகின்றனர். அப்படிப்பட்ட பட்டதாரிகளான பஸ் டிரைவர்களுக்கு பஸ் வாங்கி அவர்களே தொழில் துவங்குவதற்கு அரசு என்ன திட்டம் வைத்து இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கெல்லாம் பஸ் வாங்கித்தர வேண்டுமென்று அரசு முடிவு செய்தால், நிதி அமைச்சர் பக்கத்திலே அமர்ந்து கொண்டிருக்கிறார்; ஆகவே அந்த உத்தேசம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லாபம் தருகின்ற வழித்தடங்கள் அனைத்துமே தனியார் பஸ் உரிமையாளர்களிடம் இருந்து வருகிறது. இதனால் நம்முடைய அரசின் பேருந்துகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, அனைத்துப் பேருந்துகளையும் அரசுடமை ஆக்குவதன் மூலம், அரசுக்கு லாபத்தை ஈட்டலாம். ஆகவே, அனைத்துப் பேருந்துகளையும் அரசுடமையாக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஜனவரி 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற பேருந்துகளை இயக்குவதற்கே அரசுக்குப் போதுமான நிதியில்லை, பற்றாக்குறை இருக்கிறது. தனியாரிடத்திலே இருக்கிற பேருந்துகளுக்கும் நம்மிடத்திலே இருக்கிற பேருந்துகளுக்கும் பல்வேறு வித்தியாசங்கள் இருக்கின்றன. அது குறித்து வழக்குமன்றத்தில்கூட வழக்கு நடைபெற்று இன்றைக்கு அரசு ஒரு முடிவு மேற்கொண்டு இருக்கிறது. ஆக, இருக்கின்ற பேருந்துகளை நாமே சிறப்பான முறையில் இயக்குவது, தனியார் இடத்தில் இருக்கிற பேருந்துகளை அவர்கள் சிறப்பான முறையிலே இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. அதேபோல், அரசு புதிய வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்குவதற்கு-- குக்கிராமங்களாக இருந்து, பேருந்துகள் இல்லை என்று சொன்னால் அங்கே இயக்குவதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கின்றது. ஆகவே, தனியார் பேருந்துகளை அரசு தேசியமயம் ஆக்குகின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஸ்களை தேசிமயமாக்க வேண்டும் என்பது நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய அசையாத கொள்கையாக இருந்தாலும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், கேரளாவிலேகூட பஸ் ஸ்ட்ரைக் ஏற்படும் நேரத்தில் பஸ்களைத் தனியாருக்குத் தரவேண்டுமென்று அந்த மாநிலத்திலேகூட அறிவித்ததாக பத்திரிக்கைகளிலே நான் படித்து இருக்கிறேன். குறிப்பாக, ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த பஸ் ஸ்ட்ரைக்கின்போது சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள், பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தபோது நடுவழியிலேயே பஸ்களை விட்டுவிட்டு பயணிகளை அவதிக்குள்ளாக்கி விட்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் தேசியமய கொள்கை நம்முடைய அரசுக்கு இருந்தாலும், 50 சதவீதம் பேருந்துகள் தனியாருக்கு என்றும் மீதி 50 சதவீதம் பேருந்துகள் அரசுடமை ஆக்கப்படும் என்றும் இருக்குமேயானால், நிச்சயமாக அப்படிப்பட்ட ஸ்ட்ரைக் வருகின்ற நேரத்தில் பொதுமக்களுக்கு எந்தத் தடங்கலும் இல்லாமல், அரசு எளிமையான முறையில், பொதுமக்களுக்குப் பாதுகாப்பாக, அவர்கள் செல்கின்ற பயணம் கடைசிவரை அவர்கள் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நாங்கள் சொல்வது மட்டுமல்ல, பல்வேறு தலைவர்கள், பொதுமக்கள், படித்தவர்கள் எங்களிடத்திலே வந்து இதை

அமைச்சரிடத்திலே சொல்லுங்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி தனியார் பேருந்துகளை அதிகப்படுத்த வேண்டுமென்று 90 சதவீத மக்கள் இன்றைக்கு எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்து, ஆக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதை நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேருந்துகளைப் பொறுத்தவரை தேசியமயக் கொள்கையிலிருந்து நழுவவில்லை. இன்றைக்கு நாம் இயக்கிக்கொண்டு இருக்கின்ற பேருந்துகளைப் பார்க்கும்போது, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, 2012 வழித்தடங்களிலே புதிய பேருந்துகளை விட்டு இருக்கிறோம்; கூடுதல் பேருந்துகளைப் புதிய வழித்தடங்களில் விட்டுக்கொண்டு இருக்கிறோம். பேருந்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலும் கூடுதலாக இயக்கப்படுகிற பேருந்துகள் அனைத்தும் போக்குவரத்துக் கழகத்தாலே இயக்கப்பட வேண்டுமென்று அரசு வலியுறுத்திக்கொண்டு இருக்கிறது; மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, தேசியமயக் கொள்கையைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு, கூடுதலாக இயக்குகின்ற பேருந்துகள் அனைத்தையும் நம்முடைய போக்குவரத்துக் கழகத்தாலே கட்டாயம் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல 50 சதவீதம், 50 சதவீதம் என்ற நிலை இந்த அரசிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே, இன்றைக்கு உள்ளாட்சித் துறை மூலமும் நெடுஞ்சாலைத்துறை (கிராம சாலைகள்) மூலமும் கிராமப்புறங்களுக்கு ஏராளமான அருமையான சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. புதியதாக தார்ச்சாலைகள் போட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதிகளில் இன்னும்

1994 ஜனவரி 3]

பேருந்துகள் முழுமையாக விடப்படவில்லை. அந்தப் புதிய தார்ச்சாலைகள் பலனை அந்தப் பகுதியில் இருக்கிற கிராம மக்கள் அனுபவிக்கும் வண்ணம் சாலை வசதி நன்றாக இருக்கும் கிராமங்களுக்காவது நம்முடைய அரசு பேருந்துகளை இயக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல சாலைகள் அமைத்திருக்கிற இடத்தில் மக்கள் ஜனத்தொகை அடிப்படையில் அரசு பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. 1,000 மக்கள் தொகை இருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் பேருந்துகளை இந்த அரசு--32 கிராமங்களைத் தவிர--இயக்கி இருக்கிறது. அந்தக் கிராமங்களிலும் சாலை வசதி இருக்குமானால் உடனடியாகப் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல குறைந்த மக்கள் தொகை இருக்கிற இடத்தில் உடனடியாக பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொன்னால் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைக்கு ஏற்ப அவற்றை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் ஒரு சில பைசாக்கள் கட்டணத்தை உயர்த்தினாலும் கூட நஷ்டம் வருகிறது என்று குறிப்பாக இப்போது நிலைமை இருக்கிறது. ஆகவே, நஷ்டத்தில் ஓடுகிற பேருந்துகளை ஏன் தனியாருக்குக் கொடுக்கக்கூடாது? தனியார் ஓட்டிக் கொண்டிருக்கிறபோது அது இலாபத்தில் ஓடியது. குறிப்பாக மலைப்பகுதிகளில் ஓடுகிற வண்டிகள் நஷ்டத்தில் ஓடுவதாக அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு கேள்விக்குப் பதில் அளித்தார்கள். இப்போது அதே மலைப்பகுதிகளில் ஓடுகிற தனியார் துறை பேருந்துகள் எல்லாம் லாபத்தில் ஓடுகிறபோது அரசு ஏன் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு இருக்கவேண்டும்? ஆகவே அதைத் தனியாருக்கு கொடுத்துவிட்டால் இலாபம் ஈட்டமுடியும். நமக்கும் நஷ்டம் குறையும் அல்லவா? ஆகவே, மலைப்பகுதிகளில், மற்ற இடங்களில் நஷ்டத்தில் ஓடுகிற வண்டிகளையாவது தனியாருக்கு விடலாம் என்ற ஒரு முன் யோசனையை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் கலந்து அரசுக்கு முன்வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி போக்குவரத்துக் கழகங்களில் இயக்கப்படுகிற பேருந்துகள் பற்றியாகும். தனியாருக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பல்வேறு வித்தியாசங்கள் இருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்கள் கிராமப்புறங்களில் பல்வேறு வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கியாக வேண்டும். தனியார்கள் நல்ல வழித்தடங்களில் மட்டும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல டவுன் பஸ்களைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 6000-க்கு மேற்பட்ட வழித்தடங்களில் இன்றைக்கு நகரப் பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். சில வழித்தடங்களை நாம் பார்க்கிறபோது, ஒருசில கிராமங்களில் நாம் ஆய்வு செய்கிறபோது, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 12 கிலோ மீட்டர் சென்று திரும்பி வருகிற பேருந்தின் வழித்தடத்தில் எட்டு முறை ஒரு நாளைக்குச் செல்கிற ஒரு பேருந்தில் 24 நாட்கள் தொடர்ந்து ஒருவர் கூட பயணம் செய்யவில்லை. நாம் அந்தப் பேருந்தை நிறுத்தினால் உடனடியாக போராட்டங்கள் நடக்கிறது என்ற காரணத்தினால் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று அந்தப் பேருந்தை தொடர்ந்து இயக்கிக் கொண்டிருக்கிறோம். இதைப்போல தனியாருக்கும் நமக்கும் பல்வேறு வித்தியாசங்கள் இருக்கின்றன. தனியார் பேருந்துகளை இயக்குகிறபோது அவர்களுக்கு ஷெட் தேவையில்லை. சட்டவிதிகளுக்கு ஏற்ப தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் விதிமுறைகளை எல்லாம் ஏற்று நாம் செயல்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற பல்வேறு நிலைமைகள் இருக்கிற காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களுக்கு இலாப நோக்கமட்டுமல்ல. அரசால் இயக்கப்படுகிற போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே இவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாணவர்களுக்கு இலவச பாஸ்கள் வழங்குகிறபோதும், சமூக நலத்துறை மூலம் பல்வேறு ஊனமுற்றவர்களுக்கு பாஸ்கள் வழங்குகிறபோதும் இவற்றால் பல கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலும் சிறப்பான முறையில் இயங்க வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கையை நாம் மேற்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அரசுப் பேருந்துகளில் பாண்டியன்

1994 ஜனவரி 3]

போக்குவரத்துக் கழகம்தான் இலாபத்தில் ஓடுகிறது. அந்தக் கழகம் இலாபத்தில் ஓடிக்கொண்டிருந்தாலும் பொது மக்களுக்கு இன்னமும் அதிகமாகப் பேருந்துகள் தேவை இருக்கின்றன. ஆகவே பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமாக பேருந்துகள் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் ஓடுவதால் அதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா? அதைப் பிரிக்கும்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு சூட்டும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியில் கேட்ட கேள்வியில் அம்பேத்கார் அவர்களுடைய பெயரிலே போக்குவரத்துக் கழகம் இயக்கப்படுமா என்று கேட்டார். இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது; அவர் பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் போல் தெரிகிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் லாபத்திலே ஓடுவதன் காரணமாக, அது பிரிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். திரு. பட்டாபிராமன் கமிஷன், திரு. தில்லைநாயகம் கமிட்டியில் குறிப்பிடப்பட்டு இருப்பது, 750 பேருந்துகள் இருக்கின்ற எந்த போக்குவரத்துக் கழகத்தையும் பிரிக்கத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 900 பேருந்துகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கின்ற காரணத்தாலே, அதைப் பிரிக்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. கூடுதலாகப் பேருந்துகளை இயக்கவேண்டும் என்று சொன்னார்கள். விரைவாக கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தட உரிமங்கள் தனியார்களுக்கு வழங்கும் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் நகரப் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உத்தேசம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தேனி பன்னீர்செல்வம்.

[*1994 ஜனவரி 3*

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் கேரள எல்லைப் பகுதிக்குள் இயக்கப்படுகின்ற நிலையினை கேரள அரசு கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொண்டிருக்கிறது. இதனால், தமிழகத்திலிருந்து கேரள எல்லைப் பகுதியிலே பணியாற்றுகின்ற லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் பாதிப்பு அடைந்து, பல்வேறு சிரமங்களை அடைந்திருக்கிறார்கள். கேரளாவிலே இருக்கக்கூடிய தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி என்பவர் கூட அமைச்சர் அவர்களைச் சந்தித்து அதிகமான பேருந்துகளை இயக்கவேண்டும் என்று, தமிழ்நாட்டு மக்களுடைய சார்பிலே அதிகப் பேருந்துகளை இயக்குங்கள் என்று கேட்டுக் கொண்டார். ஆனால், கேரள அரசு அதற்கு ஒத்துவரவில்லை. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்க அனுமதி இல்லாவிட்டாலும் தனியார் பேருந்துகள் கேரள எல்லைப் பகுதிக்குள் இயக்குவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம், இன்டர்-ஸ்டேட் அக்ரிமென்ட் என்ற முறையில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளிலே பணியாற்றுவதற்கும் எஸ்டேட்டுகளிலே பணியாற்றுவதற்கும் தொழிலாளர்கள் செல்கிறார்கள், அவர்களுக்குத் தேவையான பேருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். அது கேரள அரசைப் பொறுத்தவரையில் எடுக்கவேண்டிய நடவடிக்கை. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் கூடுதலாகப் பேருந்துகளை இயக்கவேண்டும் என்று சொன்னால், சூழ்நிலைகளுக்கு ஏற்ப நம்முடைய அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவருகிறது. தேவையிருப்பின், இரண்டு டாக்ஸ் கூட கட்டி, அதற்கும் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைளை நாம் மேற்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், குக்கிராமங்களுக்கு எல்லாம் பேருந்துகளை விட்டார்கள். சரித்திர வரலாற்று சிறப்புமிக்க ஒரு சிறப்பை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1994 ஜனவரி 3]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கேள்வியாகக் கேளுங்கள்.*

திரு. கி. தருமலிங்கம்: *கேள்விதான். குக்கிராமங்கள் பேருந்துகளைப் பார்க்கவில்லை. அங்குள்ள மக்கள் வழிபடுவதற்கு ஆட்டை வைத்து பலியிட வந்தார்கள். நான் வேண்டாம் என்று கூறியும் அந்த மலைவாழ் மக்கள் ஆட்டை வெட்டி, பலியிட்டு விருந்து சமைத்துப் போட்டார்கள். அந்த வகையிலே பேருந்து விட்டு, சரித்திர வரலாறு படைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, விட்ட பேருந்துகளை எல்லாம் அந்த வழித்தடங்களிலே சில குறைபாடுகள் இருப்பதாக நிர்வாகம் கூறி அந்தப் பேருந்துகளை இப்போது நிறுத்திவிட்டது. ஆனால், அதே வழித்தடத்தில் தனியார் பேருந்துகள் செல்லும்போது, பேருந்துகள் மேலேகூட பயணிகள் செல்கிறார்கள் என்கிற ஒரு சான்றினை புகைப்படத்தோடு மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரிடத்திலே நான் காண்பிக்கிறேன். ஆகவே, ஏற்கனவே விட்ட பேருந்துகளை மட்டுமாவது – நான் தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக இருக்கிற பிரச்சினையைச் சொல்லுகிறேன், என்னுடைய தொகுதி மட்டுமல்ல – தொடர்ந்து அந்த வழித்தடங்களிலே விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயக்கப்படுகிற பேருந்துகள், நாம் ஏற்கனவே இயக்கிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப் பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். தமிழகம் முழுவதும் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாத காலமாக தொடர்ந்து மழை பெய்த காரணத்தால், சில இடங்களில் பாதைகள் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தால், பேருந்துகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. அந்தப் பாதைகளை இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு–பொதுப் பணித்துறையும்–அங்கே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பாதைகள் சீரமைக்கப்பட்டவுடனே அந்தப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில இடங்களில் தனியார் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே இயக்கப்பட்ட பேருந்துகள் இயக்கப்படவில்லை என்ற அந்த நிலையை இப்போதுதான் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்குமானால், நாளைக் காலையிலேயிருந்து அந்தப் பேருந்துகள் இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 125, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் 126, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 127, டாக்டர் பிட்ரிக்ஸ் டி 'சோசா; மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

127-

MARKETING GOODS FROM SMALL ENTERPRISES RUN BY WOMEN

***19218-Dr. BEATRIX D' SOUZA :**

Will the Hon. the Minister for Rural Industries be pleased to state--

(a) Whether the Government will consider a monthly shandy to market goods of Tiny Sector entrepreneurs, especially Women ; and

(b) if so, the details thereof

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூரில் தொழில்பேட்டை துவங்க தகுதியான நிலம் வட்டாட்சியாளர் உதவியுடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் துணை மேலாளர் தேர்ந்தெடுத்திருக்கிறார். குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர் ஆரல்வாய்மொழியிலே . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இது வினா எண் 127, குறுந்தொழில் முனைவோர்கள் பற்றியது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) குறுந்தொழில் நிறுவனப் பொருட்களை வாங்கி சேமித்து, மாதச் சந்தையில் விற்பனை செய்வது பொருளாதார ரீதியில் சாத்தியமாகாது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.